FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**

**In Collaboration with Provincial Department of Education Northern Province**

**6th Term Examination, - 2020**

| | | | | |
|---|---|---|---|---|
| இந்திய வரலாறு - I<br>Indian History - I | Two Hours<br>Gr. 13 (2020) | 25 | T | I |

- 1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் ஒன்று மற்றையோடு பொருந்தாது பொருந்தாத அப் பெயரை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளி கோட்டில் இடுக.

01) 1. நீலகிரி 2. இந்துக்குஷ் 3. விந்தியம்
4. ஆரவல்லி 5. சத்புர ( )

02) 1. சேரர் 2. பாண்டியர் 3. சோழர்
4. சந்தேவர் 5. பல்லவர் ( )

03) 1. மகேந்திர 2. குபேரநாக 3. வியாச்சரராஜ
4. சுவாமிதத்த 5. விஷ்ணுகோப ( )

04) 1. ராஷ்டா 2. வளநாடு 3. மண்டலம்
4. நாடு 5. கூற்றம் ( )

agaram.lk

05) 1. புரு 2. யது 3. துர்வாச
4. அணு 5. தஸ்பு ( )

06) 1. தமிழ் 2. கன்னடம் 3. மராத்தி
4. தெலுங்கு 5. மலையாளம் ( )

07) 1. காசி 2. கோசல 3. அங்க
4. மகத 5. வஜ்ஜி ( )

08) 1. சாஞ்சி 2. சம்பாக் 3. ராஜகிருக
4. வாரணாசி 5. கௌசாம்பி ( )

09) 1. மண்டலம் 2. வளநாடு 3. கூற்றம்
4. நாடு 5. கொப்பம் ( )

10) 1. முகம்மது பின் காசிம் 2. சபுக்திஜின் 3. கசினி முகமது
4. கோரி முகமது 5. குதுப – உத்தின். அயிபக் ( )

- ***11 – 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப்பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியினுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடியையத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.***

11) 1. துங்கபத்திரா – மேற்கு மலைத்தொடர்
2. நர்மதை – விந்தியம்
3. காவேரி – நீலகிரி
4. ராவி – சுலைமான்
5. தப்தி – சத்புர மலைத்தொடர் ( )

12) 1. சந்திரகுப்த மௌரியர் - பிந்துசார
2. சமுத்திரகுப்தன் - இரண்டாம் சந்திரகுப்தர்
3. முதலாம் இராஜேந்திரன் - முதலாம் இராஜ இராஜன்
4. இராஜ்யவர்த்தன - ஹர்ஷ்வர்த்தன
5. தர்மபால – தேவபால ( )

13) 1. மைத்திரக - வலபி
2. மௌகரி – கன்னோசி
3. காண்வ – தக்கிணம்
4. கௌட – வங்கானம்
5. குர்ஜார் - ராஜபுத்தானம் ( )

14) 1. சேநி – கலிங்கம்
2. சோழர் - மதுரை
3. மைந்ரகர் - வலபி
4. பால – வங்காளம்
5. புஷ்யபூதி – தனேசர் ( )

15) 1. வருணன் - ஆகாயத்தின் கடவுள்
2. அக்கினி – தீயின் தலைவன்
3. பிருதிவி – நிலத்தின் தலைவன்
4. உஷா – உதயத்தின் பெண் கடவுள்
5. இந்திரன் - படைப்பின் தலைவன் ( )

- ***16 – 20 வரையுள்ள வினாக்களுக்கு X,Y எனும் நிரலில் தரப்பட்டுள்ள விடயத்தில் சரியான சேர்மானத்தை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை புள்ளிக்கோட்டில் இடுக.***

16)

| X | Y |
|---|---|
| 1. காவேரி | A - தஞ்சாவூர் |
| 2. சதுத்ரி | B – ஞுபார் |
| 3. யமுனை | C - பிரதிஸ்தான |
| 4. கோதாவரி | D – பாருகச்ச |
| 5. நர்மதா | E - இந்திரப்பிரஸ்தம் |

1. ABECD 2. BCDEA 3. DCEAB
4. CDABE 5. EACDB ( )

17)

| X | Y |
|---|---|
| 1. கவிதை | A – கீதகோவிந்தம் |
| 2. வசனம் | B – ராஜதரங்கினி |
| 3. இலக்கணம் | C - கதாசரிக்சாகரம் |
| 4. வரலாறு | D – மாலதி மாதவ |
| 5. நாடகம் | E – மகாபாஷ்யம |

1.CDEAB 2. BCDEA 3. ACEBD
4. ECDAB 5. DEACB ( )

agaram.lk

18) X | Y

1. கோசல தேவி — A – பிரசோஜிந்
2. மல்லிகா தேவி — B – பிம் பிரகேனஜித்
3. விதிசா தேவி — C - கிரகவர்மன்
4. இராஜஶ்ரீ — D – அஜாதசத்ரு
5. வஜிரா — E – அசோகன்

1. ACDEB 2. BAECD 3. CDAEB
4. DEABC 5. EDABC ( )

19) X | Y

1. சோம — A – நிர்வாக அலகு
2. நிஷ்க — B – திவ்வியபானம்
3. குல — C - அரண்சூழ் நகரம்
4. பூர் — D – குடும்பம்
5. ராஷ்ட்ர — E – புராதன ஒருவகை பொற்காசு

1. CDEBE 2. ACDEB 3. DEABC
4. BEDCA 5. EABCD ( )

20) X | Y

1. சிம்மவிஷ்ணு — A - இரண்டாம் நாகபட்டன்
2. வத்ஸராஜ — B – சமுத்திரகுப்தன்
3. விந்துசார — C - மகேந்திரவர்மன்
4. ஸ்கந்த குப்த — D – மருகுப்த
5. 1ம் சந்திரகுப்தன் — E – அசோகன்

1. DCEAB 2. EDABC 3. ACDEB
4. BCDEA 5. CAEDB ( )

- **21 – 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அப் பொருந்தாதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

21) மோரியருக்குப் பிற்பட்டகாலத்து வாணிபம்
1. இந்தியர்கள் உரோமப் பேரரசோடு வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர்
2. உரோமபுரியில் இந்திய வணிகர் ஒரு குடியிருப்பை ஏற்படுத்தியிருந்தனர்
3. மேற்கு நாடுகளுடனான வாணிபத்தில் பாருஹட்சம் மிக முக்கியமான துறைமுகமாகும்
4. இக்காலத்தில் தொழில்வினைஞர் சிரேணிகளாக அமைந்திருந்தனக்.
5. சிரேணிகள் வங்கிகளாகவும் செயற்பட்டன. ( )

22) மகத இராச்சியத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஏதுவான காரணங்கள்
1. இராச்சியத்தினதும் அதன் இராசதானியினதும் புவிசார் அமைவிடம்
2. விவசாயம், வாணிபம் அபிவிருத்தியடைந்தமை
3. அதன் மன்னர்களின் கட்டுபாட்டுள்ள இராணுவம்
4. வளங்கள் பெருகியிருந்தமை
5. அயலில் அமைந்திருந்த கணராச்சியங்களின் ஆதரவு ( )



agaram.lk

23) தென்னிந்தியாவும் மௌரியரும்
1. தென்னிந்தியாவில் மௌரியருக்குப் பிற்பட்ட காலத்திலும் சேர, சோழ, பாண்டியர் சுதந்திரமான அரசர்களாவார்
2. கி.பி இரண்டாம் நூற்றாண்டுச் சோழ மன்னர்களிற் கரிகாலன் சிறப்புமிக்க ஒருவன்
3. சேரர், குப்தப் பேரரசுடன் நெருக்கமான வாணிபத் தொடர்புகளைக் கொண்டிருத்தல்
4. பாண்டிய தேசத்திலே பெண் ஒருத்தி அரசு புரிந்தாளென்று சமகாலத்து மேன்பாட்டு நூலாசிரியர் ஒருவர் கூறியுள்ளார்
5. புலவர்களின் மூன்று வகையான சங்கங்கள் பாண்டிய மன்னரின் ஆதரவிலேயே கூட்டின.

( )

24) சோழர் கோயில்கள்
1. கர்பக்கிரகம், அந்தராலம், மண்டபம என்பனவே சோழரின் கோயில்களின் பிரதான அம்சங்களாகும்
2. கோபுரம் சோழர் காலத்துக் கோயில்களுக்கு ஒரு முக்கியமான அமைப்பாகும்
3. தஞ்சாவூரிலுள்ள சில சோழர்காலக் கோயில்களிற் சோழ மன்னரின் படிமங்கள் உள்ளன.
4. புகழ்பெற்ற ரதங்களின் கட்டுமானமுறை சோழர் காலத்தில் உற்பத்தியானது
5. சோழ மன்னர்கள் கோயில்களுக்குப் பெருஞ் செல்வங்களை நன்கொடையாக வழங்கினார்கள்

( )

25) ஹோரி முகமதின் படையெடுப்பு
1. இந்தியாவினுடைய செல்வங்களைச் சூறையாடுவது அவன் மேற்கொண்ட படையெடுப்புக்களின் குறிக்கோள்களில் ஒன்றாகும்
2. 1206 இல் தில்லியைக் கைப்பற்றி அதனைத் தனது பேரரசு இராசதானியாக்கினான்
3. ஹோரி முகமது 25 வருடங்களில் இந்தியா மீது 17 தரம் படையெடுத்தான்
4. 1191 இல் முதலாவது தரைப் போரில் பிரதிகாரஜன் அவனுக்கெதிராகப் போர்புரிந்து அவனைத் தோற்கடித்தான்
5. சோமநாத்திலுள்ள பிரபலமான இந்துக் கோயிலை அவனுடைய படைகள் அழித்தன. ( )

- **26 – 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A), (B), (C), (D) என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும் சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**

(A) யும் (B)யும் மாத்திரம் சரியாயின் 1 எனவும்
(A) யும் (C)யும் மாத்திரம் சரியாயின் 2 எனவும்
(B) யும் (C)யும் மாத்திரம் சரியாயின் 3 எனவும்
(C) யும் (D)யும் மாத்திரம் சரியாயின் 4 எனவும்
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் 5 எனவும் அடைப்புக்குள் எழுதுக.

26) இதிகாசங்கள்
(A) மகாபாரதத்திற்கு முன்பே இராமாயணம் எழுதப்பட்டது என்று நம்பப்படுகின்றது
(B) ஆயினும் மகாபாரதத்தின் அடிப்படைக் கதையில் நிகழ்ச்சிகள் இராமாயணத்தில் உள்ளவற்றைக் காட்டிலும் முற்பட்டவை
(C) இராமாயணம் சங்க இலக்கியத்துள் அடங்கும்
(D) இராமயணத்தின் ஆசிரியர் வால்மிகி காளிதாசனின் காலத்தவர் ( )

27) குப்த பேரரசின் வீழ்ச்சிக்கு ஏதுவான காரணங்கள்
(A) ஸ்கந்த குப்தனுக்கு பின் வந்த அரசர்களின் பலவீனம்
(B) ஆட்சியுரிமை குறித்து வரையறையான சட்டங்கள் இல்லாமை
(C) கூனர் படையெடுப்புக்கள்
(D) எல்லைப் புறங்களின் பாதுகாப்பைக் கவனிக்காமை ( )

agaram.lk

28) அனுந்தா ஓவியங்கள்
   (A) பெரும்பாலான ஓவியங்கள் சமயம் சார்பானவை
   (B) அனுந்தா குகை ஓவியங்களின் புரவலர்களாகப் பல்லவர் விளங்கியமை
   (C) ஓவியங்கள் பௌத்த சங்கத்தாரின் திருப்பணிகளாகும்.
   (D) பெரும்பாலான ஓவியங்கள் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை ஜாதகக் கதைகள் என்பன பற்றியவை
( )

29) இராஜேந்திர சோழனின் வெளிநாட்டுச் கொள்ளை
   (A) ஸ்ரீ விஜயப் பேரசைச் கைப்பற்றி இணைத்து கொண்ட
   (B) சீனாவுடன் கலாசாரந் தொடர்புகளை ஏற்படுத்தினர்
   (C) இந்து சமுத்திரத்தில் வர்த்தகத்தைக் கட்டுப்படுந்தினால்
   (D) பலம்மிக்க ஒரு கடற்படையை உருவாக்கிளைக் ( )

30) தென்னிந்திய இந்துக் கோயில்களில் பிராதான பகுதிகள்
   (a) கர்ப்பச்கிரகம்
   (b) சிகரட்
   (c) அந்தராளம்
   (d) சைந்தியசாலை ( )

- **31-35 வரையுள்ள ஒவ்வொரு வினாகளுக்கும் உரிய சரியானவிடையற் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எமுதுக.**

31) பாடலிபுத்திர நகரத்தின் தாபகர் யார்
   (1) பிம்பிசாரர்
   (2) உதயன
   (3) மகா பத்மநந்தன்
   (4) சந்திரகுப்தமௌரியன்
   (5) புஸ்யமித்ர சங்கன் ( )

agaram.lk

32) அரசியல் பண்பாட்டைத் தென்னிந்தியாவில் அறிமும் செய்தவர் என்று கொள்ளப்படுவவர்
   (1) வான்மீகி
   (2) விஸ்வாமித்திரர்
   (3) வசுபந்து
   (4) பரதர்
   (5) தர்மபாலன் ( )

33) மும்முடிச் சோழன் என்ற பெயரைக் கொண்ட அரசனின் பெயரைக் குறிப்பிடுக.
   (1) முதலாம் ஆதித்தன்
   (2) முதலாம் பராந்தகசன்
   (3) முதலாம் ராஜராஜன்
   (4) முதலம் ராஜேந்திரன்
   (5) முதலாம் குலோந்துங்கன் ( )

34) விஸ்வகர்மா குகை காணப்படும் நலம் எது?

1) எல்லோரா
2) அஜந்தா
3) பாக்
4) வாதாபி
5) சாரணாந் ( )

35) சுதர்ஷன் தடாகம் முதன் முதலாகர் கட்டப் பட்டகாலத்து அரசனின் பெயர் என்ன

(1) காரவேலன்
(2) ஸ்கந்த குப்தன்
(3) உருந்திரநாமன்
(4) சந்திரகுப்த மோரியன்
(5) 1ம் சாதகர்ணி ( )

- **36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் தரப்பட்டுள்ளன அவற்றிற்கு அட்டவனையில் காணப்படும் 1,2,3,4,5 என்பவற்றில் மிகவும் பொருந்தமானது எதுவென்பதை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | கி.மு ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவிலே பதினாறு மகாஜனபதல்கள் இருந்தன வென்பது அங்கத்தர நிகாய என்பதன் மூலம் அறிய முடிகின்றது. | பதினாறு ஜன பதங்களில் சாக்கியரின் கபில வஸ்து இராச்சியப் ஒன்றாகும் ( ) |
| 37) | குஷாணர்களைத் துரத்திய பின் சாதவாகனர் தக்கிணந்தில் தமது இராச்சியத்தை அமைத்துக் கொள்ள முடிந்தது | சாதவாகன வம்சத்தவரே தக்கிணத்தில் முதலாவது பேரரசை அமைந்தனர் ( ) |
| 38) | பாகியன் இலங்கையிலிருந்து கடல் வழியாக இந்தியாவிற்குச் சென்றார் | அவர் தரைவழியாக மத்திய ஆசியாவினூடாக சீனாவிற்குத் திரும்பிச் சென்றார் ( ) |
| 39) | பந்தாம் பதினோராம் நூற்றாண்டுகளிரல் தக்கிணத்திலே சாளுக்கியரின் ஆதிக்கம் நிலவியது | இந்தியா மீது படையெடுத்த அராபியரைச் சாளுக்கியர் தோற்கடித்தனர் ( ) |
| 40) | பாலர் இராச்சியம் எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வங்காளத்தில் அமைக்கப்பட்டது | பாலர் வம்சத்தின்தாபகன் கோபாலன் என்பவன் அவன் இக்காலத்து வங்காளம், பீகார், அசாம் என்பன பாலரின் இராச்சியத்தில் அடங்கியிருந்தன பாலர்கள் பௌத்த சம்பந்துக்கு மிகுந்த அளவில்ஆதரவு புரிந்தனா ( ) |

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
6th Term Examination, - 2020

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்திய வரலாறு - II<br>Indian History - II | Two Hours<br>Gr. 13 (2020) | 25 | T | II |

- முதலாம் வினா கட்டாயமானது B,C ஆகிய ஒவ்வெரு பகுதியிலிருந்தும் ஆகக் குனறந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக. (முதலாம் வினா விடையளிப்பதரற்கு இந்திய புரவுருவப்படம் வழங்கப்பட்டுள்ளது)

## பகுதி A

1. உமக்கு வழங்கப்பட்டுள்ள புரவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ளன அனைத்து இடங்களையும் குறித்து பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| (A) | லோதல் | (G) | காவேரிப்பட்டணம் |
| (B) | கோதாவரி ஆறு | (H) | இந்திரப்பிஷ்தம் |
| (C) | சுலைமான் மலை | (I) | வைசாலி |
| (D) | அமராவதி | (J) | தஞ்சாவூர் |
| (E) | மதுரா | (K) | பாடசிபுரம் |
| (F) | சாஞ்சி | (L) | அஜந்தா |

(12 x 1 = 12புள்ளிகள்)

agaram.lk

## பகுதி B

2. இந்து கங்கை சமவெளி இந்திய வரலாற்றை எவ்வாறு செல்வாக்குட்படுத்தியுள்ளது என்பதை விளக்குக. (16 புள்ளிகள்)

3. மொஹெஞ்சோதரோ, ஹரப்பா நாகரிகத்தின் சமூக, பொருளாதார பண்பாட்டு நிலைகளை விளக்குக. (16 புள்ளிகள்)

4. சந்திர குப்த மௌரியனின் சாதனைகளைப் பரிசீலனை செய்க (16 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை வரலாற்று முக்கியத்துவத்தைப் பரசீலனை செய்க.
   1. வர்ணாச்சிரம தர்மம்
   2. காந்தாரக் கலை மரபு
   3. சங்க இலக்கிய
   4. புராதன இந்தியாவின் கண இராச்சியங்கள் (8 x 2 = 16புள்ளிகள்)

## பகுதி - C

6. தக்கணத்தில் சாதவாகன மன்னர்கள் ஏற்படுத்திய சாதனைகளை ஆராய்க (16 புள்ளிகள்)

7. சமுத்திர குப்த மன்னன் நடத்திய படையெடுப்புகளை விபரிக்குக. (16 புள்ளிகள்)

8. "குப்தர்களின் பின்பு ஹர்சவர்த்நனர்களின் ஆட்சிக் காலத்தில் வட இந்தியா முக்கியம் பெற்றது.

   I. ஹர்ஷவர்ந்தனனின் ஆட்சிக்காலம் பற்றிய விபரங்களைக் கூறும் நூலொன்றின் பெயரைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

   II. அவனுடைய ஆட்சிக்காலத்தில் பௌத்த மாநாடுகள் கூடிய இரண்டு இடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   III. கன்னோசியில் எவ்வாறு அவன் அரச பதவி பெற்றான் என்பதை சுருக்கமாக விளக்குக. (1 புள்ளி)

   IV. வடஇந்தியாவிலே ஆதிக்கத்திலும் பண்பாட்டிலும் கன்னோச்சி முதன்மை பெறுவதில் ஹர்சவர்ந்தனை் கொண்டிருந்த பங்கினை ஆராய்க. (8 புள்ளிகள்)

9. A. பகுதியை அல்லது Bபகுதியை மட்டும் விடை எழுதுக.

   A. கி.பி ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் மேற்கிந்தியாவிலும் வடமேற்கு இந்தியாவிலும் ஏற்பட்ட அராபியர் படையெடுப்புகளைப் பற்றி நுணுக்கமாக பரிசிலனை செய்க.


   B. சோழர் காலத்தில் தென்னிந்தியாவில் கலை கட்டக்கலை என்பவற்றின் வளர்ச்சியினைப் பற்றி ஆராய்க (16 புள்ளிகள்)

agaram.lk

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**6th Term Examination - 2020**

| தரம் :- 13 (2020) | இந்திய வரலாறு | |
|---|---|---|




agaram.lk